<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 218/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3 |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கோபால் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராஜபாண்டியன் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 25.08.2022.

<u>முதல் விசாரணை:</u>

1. நான் உடுமலையில் வசித்து வருகிறேன். நான் மளிகை கடையில் வேலை செய்து வருகிறேன். 03.05.2015 ம் தேதி மாலை 06.00 மணிக்கு திருடுபோனதாக கேள்விப்பட்டு கடை முதலாளி வீட்டிற்கு நானும் ஐசக்கும் சென்றபோது உடுமலை போலிசார் அங்கு வந்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் **(பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த பார்வை மகசர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. திருடுபோனது எனது முதலாளி வீடு என்றால் சரிதான். எனது முதலாளி வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான் என்னிடம் ஒரே கையெழுத்து தான் வாங்கினேன். நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்றால் வீட்டில் உள்ள அறைகள் கதவு, மற்றும் காம்போன்டு போன்றவை பற்றி

குறிப்பிடப்பட்டிருந்தது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு எனது முதலாளி வீட்டில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேறு யாரிடமும் கையெழுத்து வாங்கவில்லை என்று சொன்னால் என்னுடன் வந்த ஜசக்கிடம் கையெழுத்து வாங்கினார்கள்.